தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

1987, ஏப்ரல் 1, புதன்கிழமை

பங்குனி 18, அக்ஷய— திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பருவத்தொடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.''

காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல், நில்லாத இயல்புடைய செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

I. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு பயிற்சி நிலையம்

231—(*வினா எண். 8798) திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நெல்லிக்குப்பத்தில் அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நெல்லிக்குப்பத்தில் புதிய கூட்டுறவுப்பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

பெரியார் மாவட்டம் சென்னிமலையில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

232—(*வினா எண். 10153) திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சென்னிமலையில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி துவங்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், சென்னிமலையில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி துவங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னிமலையில் ஏராளமான கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களும், கைத்தறியை நம்பி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளர் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகவே, புதிய பயிற்சிக் கல்லூரியை அப்பகுதியில் ஆரம்பிக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஈரோட்டில் ஒரு ஒருங்கிணைந்த கூட்டுறவுப் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. அதைத் தவிர, கோவையில் ஏற்கனவே ஒரு பயிற்சிப் பள்ளி இயங்கி வருகிறது, தனியாக சென்னிமலைக்கு ஒன்று தேவையில்லை.

தீ பிடித்து சேதமான வீடுகளுக்கு அளிக்கப்படும் தொகை.

233—(*வினா எண். 11604) திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இயற்கையால் தீ பிடித்து வீடுகள் சேதமானால் தற்போது வழங்கப்படும் தொகையை அதிகரித்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான செயற் குறிப்பு இப்போது அரசின் ஆய்வில் இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்கிறபொழுது இப்பொழுது பரிசீலனையில் இல்லையென்று சொன்னார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில், குறிப்பாக, சென்னை மாநகரத்தில், வெயில் காலங்களில், திடீர், திடீரென்று தீ விபத்தால் இலட்சக்கணக்கான குடிசைகள் சேதம் ஆகிவிடுகின்றன. இன்றைக்கிருக்கக் கூடிய விலைவாசிகளைப் பொறுத்தவரைக்கும் 100 கீத்து ரூ. 100-க்கு விற்கிறது; ஒரு மூங்கில் ரூ. 20-க்கு விற்கிறது; 100 பாளைகள் ரூ. 15-க்கு விற்கிறது; கயிறு ஒரு கிலோ ரூ. 15–க்கு விற்கிறது. அதற்குக் கொடுக்கிற ரேட்டையும் விலைவாசியையும் பார்க்கும்போது, எரிந்த பிறகு வீடு கட்ட முடியாத நிலைமைதான் இருக்கின்றது. ஆகவே, இப்பொழுது இருக்கிற ரேட் எவ்வளவு? எதிர்காலத்தில், அத்தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு, அவ்வப்போது, இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து, ஓரளவுக்குத் தொகை உயர்த்திக் கொடுக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. ரூ. 30-ஆக